ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X

# புதிய அவையம்
# PUTHIYA AVAIYAM

A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023

SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

## உமா மகேஸ்வரியின் இறுதிப் பூ – சமூக நோக்கு

பு. வினோதா,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
இக்கால இலக்கியத்துறை,
தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை – 21.

முனைவர். வை.இராமராஜபாண்டியன்,
பேராசிரியர் & புலத்தலைவர்,
தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை – 21.

ஆய்வுச் சுருக்கம்

கவிதை என்பது சமூகத்தின் மீதான சாடல்களாக மட்டும் வெளிப்படுவதன்று. அதனை இணை நிலையில் அவைத்து அணுகும் முறையாகவும் வெளிப்படும் என்பதை உமா மகேஸ்வரியின் கவிதைகள் சுட்டுகின்றன. அவருடைய சமூகம் பற்றிய அவதானிப்புகள் இயற்கை, குழந்தைமை, பெண்ணின் அகப் படிமம் என்பதாக அமைகிறது. இயற்கையை நேசிக்கும் குழந்தையைப் போலவும் ஒரு தாயைப் போலவும் அணுகும் முறையை வெளிப்படுத்துகிறார். கடலை சங்கினுள் அடைக்கும் வியாபகத்தை அவருடைய அணுகுமுறை வெளிப்படுத்துகிறது. பெண் என்பவள் ஆணால் இயக்கப்படும் இயந்திரம் போலவே கருதும் சமூகத்தின் மீது எரிந்து விழாத மனநிலையில் கவிதைகளில் அகப் படிமமாகவே சுட்டிச் செல்கிறார் என்பதை இக்கட்டுரை தெளிவுறுத்துகிறது.

குறிப்புச் சொற்கள்: சமூகம், தனிமனிதன், ஆணாதிக்கம், அகப் படிமம், சமூக இயைபு, நனவிலிப் படிமங்கள்

### ஆய்வு அணுகுமுறை

இக்கட்டுரையில் விளக்கமுறை, சமூகவியல் மற்றும் பகுப்பாய்வு அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.

### முன்னுரை

கவிதை என்பது மனிதர்களின் உளப் பாங்கினை வெளிப்படுத்தும் கலை வடிவம் ஆகும். சிக்மண்ட் ப்ராய்டினால் கனவு விளக்கத்தில் கூறப்பட்ட கருத்தானது கலைப் படைப்புகள் ஆழ்மனத்தின் வெளிப்பாடுகள் என்பதாகும். கலைச் செயல்பாடுகளும் கனவுகளைப் போன்றததுதான் என்பதாகும். கவிதை என்பது பகற் கனவிற்கும் கதை என்பது இரவுக் கனவிற்கும் ஒப்பிடப்படுகிறது. கவிதையில் நனவிலியின் ஆதிக்கமும் கதையில் நனவு மனத்தின் ஆதிக்கமும் காணப்படுகின்றன. அதனால்தான் படைப்பாளிகளை உளநோய்க்குறி கொண்டவர்கள் என்று கூறுகின்றனர். சமூகவியல் நோக்கில் கலைகள் என்பவை மக்களின் வாழ்வியலை பதிவு செய்யும் ஓர் ஆவணக் காப்பகம் போன்றது. சமூகவியலாளர்களும், வரலாற்றாளர்களும் போல் இலக்கிய வாதிகளும் சமூகத்தின் மேல் தம் பார்வையை முன் வைக்கின்றனர். சிலருடைய பார்வைகள் சமூகத்தை நோக்கி கேள்வி எழுப்புவதாக அமைகின்றது. சிலருடையவை சமூகப் போக்கில் தன்னைக் கரைத்துக் கொள்வதாக அமைகிறது.

*பெரும்பான்மையும் சமூகத்தின் மீதான கோபத்தையே படைப்பாளிகள் படைப்பாக்குகின்றனர் என்பது இயல்பான ஒன்றாகும். கவிதை வழி சமூகத்தின் மீது அரசியல் மீது தன் சினத்தை வெளிப்படுத்தியவர்கள் எண்ணற்றவர்களாக இருக்கின்றனர், பாரதியிலிருந்து இன்குலாப், அறிவுமதி, மாலதி மைத்ரி, குட்டி ரேவதி வரையிலான கவிஞர்கள் சமூகக் கோபத்தை தம் கவிதைகளில் படைப்பாக்கியவர்கள் ஆவர். அகவயமான பரிதவிப்புகளையும், சமூகத்தின் மீதான பார்வையையும் முன் வைத்து எழுதக் கூடியவர்களில் ஒருவரான உமா மகேஸ்வரியின் கவிதைகள் அகவயமான சிக்கல்களைக் குறித்த ஏக்கங்களையும், பால்யகாலத்து நினைவுகளையும் ஒருசேர வெளிப்படுத்துகிறார். சமூக நோக்கில் அவரது கவிதைகள் தரும் பரிமாணம் என்பது சமூகத்தின் மீதான கோபமாக வெளிப்படாமல் சக பயணியைப் போல கடந்து செல்லும் விதம் வெளிப்படுகிறது. அதாவது சமூகத்தை இரு கூராக்குவது போல் எழுதாமல் மைய நீரோட்டத்தில் பயணிப்பவர் போல இருக்கிறார். அவருடைய கவிதைத் தொகுப்புகளில் ஒன்றான இறுதிப் பூ என்னும் நூலில் அவரது சமூகம் சார்ந்த பார்வை வெளிப்படுத்த இக்கட்டுரை முயல்கிறது.*

*சமூகத்தில் தனிமனிதன்*

*மக்கள் ஒன்றிணைந்து வாழும் அமைப்பிற்கே சமூகம் என்று பெயர். மக்கள் குழுவாக, கூட்டமாக இருந்தாலே அதற்குப் பெயர் சமூகம் என்று குறிப்பிடுவதில்லை. சமூகம் மனிதர்களின் ஒன்றிணைந்த பல்வேறு கருத்தியல்களின் அடிப்படையில் கூட்டமைப்பாக நிறுவப் படுவதாகும். "சமூகம் என்பது மனித வர்க்கத்தினால் ஆனது எனவம் மக்களின் திரள் எனவும் கூறப் பெறுதலால் சமூகத்தின் முக்கியமான கூறு மக்களே என்பது அறியக் கிடக்கிறது" (சு.மலர்க்கொடி, சமூகவியல் நோக்கில் மணிமேகலை, ப.18) என்று சமூகம் என்பதனை மக்களின் கூட்டிணைவினால் உருவான அமைப்பாகக் குறிப்பிடுகிறார் சு.மலர்க்கொடி. இச்சமூகத்தின் பல்வேறு நிறுவனங்களில் தம்மைப் பிணைத்துக் கொள்பவர்கள் சமூக மனிதர்களாக மாறுகிறார்கள். ஒவ்வொரு தனிமனிதருக்குள் வெளிப்படும் எண்ணங்கள் சமூக நீரோட்டத்தோடு இணைக்கப்படுகிறது. அவ்வாறு இணைந்தால்தான் சமூகவயமாதல் மூலம் சமூக மனிதனாக முடியும். ஆயினும் ஒவ்வொரு மனிதருள்ளும் இருக்கும் வெவ்வேறு எண்ணங்கள் அவரவர் தனித்தன்மையினை வெளிக்காட்டுவதாக அமைந்திருப்பனவாகும். பொதுவான சிந்தனை அமைப்புகளையும் தனித்துவமான சிந்தனை அமைப்புகளையும் ஒரு மனிதர் தனக்குள்ளே கொண்டிருக்கிறார். பொதுவான மனநிலையில் வெளிப்படுத்தும் கருத்துக்கள் சமூகத்தின் ஒவ்வொரு மனிதராலும் ஏற்றுக் கொள்ளத்தக்கனவாக அமைகின்றன. உதாரணமாக ஒழுக்க வாழ்வினைக் குறித்து ஒருவர் கொள்ளும் மனப்பான்மை சமூகத்தில் உள்ள அனைவராலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக அமையும். அதே வேளையில் ஒழுக்கத்தில் சில கூறுகளை தனித்துவமாக ஒருவர் கொண்டிருக்கக் கூடும். தலையை வாரிக்கொள்ளும் ஒருவர் பிறரிடமிருந்து முற்றிலும் வேறுபடுகிறார். ஆடை அணிவதில் வேறுபாடு கொள்வது இயல்பாகும். அது போல சில கருத்தாக்கங்களில் வேறுபடுதல் இயல்பாக இருக்கும். ஒருவர் கடைபிடிக்கும் வழக்கங்களை பிறிதொருவரும் அப்படியே கடைபிடித்தல் வேண்டும் என்ற நியதி இல்லை. இது அவரவர் தனித்தன்மைக்கு ஏற்ப அமைவனவாகும்.*

*சமூக நடப்புகளும் கவிதையும்*

*சமூகத்தின் பல்வேறு நிகழ்வுகளில் தனிமனிதப் பங்கேற்பு என்பது நிச்சயமாக இருக்கவே செய்கிறது. அன்றாட நிகழ்வுகளில் கருத்துரைத்தல் அல்லது வேறுபடுதல் என்பதும் நிகழும் ஆனால் அதேவேளையில் எவ்வித கருத்தும் கூறாது ஒவ்வொரு நிகழ்வினோடும் கலந்துரையாடி தன் பயணத்தை அமைத்துக் கொள்வதும் ஒருவரது இயல்பாகக் கருதலாம். அவ்வாறான இயல்பான நடவடிக்கைகளைப் பற்றிய சிந்தனைகள் உமா மகேஸ்வரியின் கவிதைகளில் இழையோடுகின்றன.*

*அன்றாடங்களில் கரைந்து போகும் மனம்*

*மனிதர்கள் ஒவ்வொரு நாளும் தம் பணிகளை செவ்வனே செய்து அந்த நாளை முடிவடையச் செய்கின்றனர். அவ்வாறான செயல்பாடுகளில் ஒரு விதமான இயந்திரத் தன்மை*

*படிந்து விடுகிறது. அவ்வாறின்றி கலைத் தன்மையுடன் இயற்கையை உலகை அணுகும் போது புதிய சாளரங்களுக்கானத் திறப்புகள் உருவாகி விடுகின்றன.*

*குழந்தைக்கு இயற்கையின் மீது இருக்கும் ஆவல் மிக வலியது. தனக்காக இயற்கை இசைந்து கொடுக்க வேண்டுமெனக் கருதும். அவ்வாறு இசைந்து குழந்தையிடம் இயற்கை தன்னை ஒப்புக் கொடுக்கிறது. நீரோடு போகும் பூ என்னும் கவிதை இதனை வெளிப்படுத்துகிறது. நீரோடு போகும் பூதான் வேண்டும் என்று அடம் பிடிக்கும் குழந்தையிடம் தாய் கூறுகிறாள்,*

*“ஒருபோதும்*
*கைப்பற்ற ஒப்புக் கொடுக்காதது*
*அதன் மலர்மை*
*போய்க்கொண்டேயிருக்கிறது அது.*
*நீரோடு நீராக*
*அடம் தொடரும் குழந்தையிடம்*
*வேறென்ன சொல்ல*
*நீரோடு போகும் பூ வேண்டுமென்று*
*நீயே கேள் நீரிடமே” (இறுதிப் பூ, ப.14)*

*என்னும் கவிதை அடிகள் நீரிடம் குழந்தையைக் கேட்கச் சொல்லும் தாய். இயற்கையை குழந்தை வசமாக்கும் செயலாக விரிகிறது. தாய் நீரோடு போகும் பூவை கைப்பற்ற இயலாது. எனவே குழந்தையே நீரிடம் கேட்டுக் கொள்ளக் கூறுகிறாள். இயற்கையுடன் இசைந்து போகும் குழந்தை மனம் என்பது இவ்வாறு வெளிப்படுகிறது. குழந்தைக்கு இயற்கையோடு தன்னை பிணைத்துக் கொள்கிறது. நாகரிக மனிதர்கள் இயற்கையைத் தன்வயப்படுத்த முயன்று அந்நியமாகி விட்டனர் என்பதை இக்கவிதை உணர்த்துகிறது, “வளர்ச்சிப் பேரிடர்கள் மனித குலத்துக்கும் பூமியின் இருப்புகளும் அச்சுறுத்தலாக எழும் சிக்கல். நிலத்தையும், நீரையும், காற்றையும் மனிதன் கையாண்டு வரும் முறையினால் பூமி மெதுவாக அழிந்து கொண்டிருக்கிறது” (வறீதையா கான்ஸ்தந்தின், கடற்கோள் காலம், ப.32) என்ற கூற்றினால் இயற்கை அந்நியமாகும் நிலையினை அறிந்து கொள்ளலாம். மனிதர்கள் இயற்கையோடு வசமாகும்போதுதான் நீரோடு போகும் பூ குழந்தையுடையதாக இருக்கும் என உணர்த்துகிறார் ஆசிரியர். இது போல், கடலிடம் கேட்கும் கேள்வியில் கடல் அந்நியமாகி விடுகிறது என்று கூறுவதை,*

*“ஒன்றுமில்லை*
*என்றைக்கும் போல*
*காதோரம் பதிக்கையில்*
*அலையோசையிடம் கேட்டேன்*
*விசனத்தோடு*
*இவ்வளவு அழிவாயென*
*அதன் மூர்க்கம் குறித்து*
*அவ்வளவுதான்*
*எவ்வளவோ தடுத்தும் கேளாமல்*
*என்னுடைய சங்கிலிருந்து*
*இறங்கிப் போய் விட்டது*
*கடல்*
*திரும்பியே பாராமல்” (இறுதிப்பூ, ப.13)*

*என்னும் கவிதையும் இயற்கையுடன் இசைந்து போக வேண்டுமேயல்லாது. அதனைக் கேள்விக்குட்படுத்தினால் அது விலகிச் சென்று விடும் என்று கூறப்படுகிறது. கடல் அலை என்பது மூர்க்கத்தின் குறியீடாக இங்கு சுட்டப்படுகிறது. தன்னை ஓர் சங்காக உருவகித்துக் கொள்ளும் போது கடல் அதனுள் உள்ளோடுகிறது. கேள்வியால் திடுக்குற்று இயற்கை சங்கை விடுத்து விலகி விடுகிறது. கடலின் மூர்க்கம் என்பது இங்கு பேரலைகளைக் குறித்து நிற்கிறது. அதனால் விளையும் அழிவை வேறென்ன செய்து விட முடியும் என்ற கையறு நிலைதான் இக்கவிதையில் வெளிப்படுகிறது. சுனாமி நிகழ்வினைக் குறித்ததாக அமைகிறது. யாராலும்*

*ஈடுகட்ட முடியாத இழப்பினை ஏற்படுத்திய சுனாமி "கடல் திரண்டு நிலத்தை மூழ்கடித்தது. ஆயிரக்கணக்கான உயிர்களையும் உடைமைகளையும் விழுங்கி மீண்ட அடியோடு நிலத்திலிருந்து கடலை நோக்கி ஒரு கருணைச் சுனாமி கிளம்பி நெய்தல் சமூககங்களை மூழ்கடித்தது" (வறீதையா கான்ஸ்தந்தின், பழவேற்காடு முதல் நீரோடி வரை, ப.44) என்று சுனாமியின் அழிவு குறிப்பிடப்படுகிறது. கடலின் இச்செயல் குறித்து கேள்வி எழுப்பினால் கோபித்துக் கொள்கிறது. சங்கினுள் குடி கொண்ட கடல் அதிலிருந்து இறங்கி விடுகிறது. மைய நீரோட்ட மனப் பாங்கு என இதனைக் கொள்ளலாம். சுனாமி என்னும் பேரலைகளால் மக்கள் மடிந்து துயருற்ற போது கடலை நோக்கி கேள்வி எழுப்பியவர்கள் எண்ணற்றோர். தம் படைப்புக்களால் வசை பாடினார்கள். இறைஞ்சி அழுது வைதார்கள். ஆனால் அதனால் எல்லாம் இயற்கையை என்ன செய்து விட முடியும் என்ற நோக்கில்தான் இக்கவிதை வெளிப்படுகிறது.*

*பெண் மனச் சிடுக்குகள்*

*சமூக அழுத்தத்திற்கு உள்ளாகும் தன்னிலைகளாக பெண்கள் இருப்பதைப் பற்றி உளவியல் அறிஞர்கள் கூறும் கருத்துக்கள் அவை பெரும்பாலும் அடக்கி வைக்கப்பட்ட நனவிலி எண்ணங்களாக வெவ்வேறு வழிகளில் வெளிப்படும் என்பதாகும். அதாவது ஆண், பெண் இருவரது நனிவிலியிலும் சமூக அழுத்தத்திற்கு உள்ளாக்கப்படும் எண்ணங்கள் முடக்கப்படுகின்றன. இதில் பெண்கள் மிகுதியாக பண்பாட்டு தளைகளால் பின்னப்பட்டுள்ளனர் என்பதால் அவர்களது நனவிலியில் மிகுதியான அழுத்தத்திற்கு உள்ளான நினைவுகள் பதிவு பெறுகின்றன. நனவடங்கு நிலையில் முடக்கப்பட்ட எண்ணங்கள் கலைப் படைப்புகளாக வெளிப்படும் இயல்பினவாகும். அந்த வகையில்தான் மறதியற்று என்னும் கவிதையில் உள்மன ஆழத்தில் முடக்கப்பட்டிருக்கும் நனவிலி எண்ணங்கள் வெளிப்படுகின்றன,*

*"அடைத்திருக்கிறது*
*பாதாளக் கிடங்கு*
*தாயக்கட்டை சோழிகள் ஏழாங்கற்கள்*
*வயல்வெளி, துளி மழை*
*கனவின் உடைவு*
*நைந்த தோழமை*
*காதலின் நரை*
*மாதாந்திரக் குருதி*
*சிதைந்த கரு*
*என்று*
*அடையாளம் தேய்ந்த*
*அத்தனையும்*
*கிடக்கின்றன இறைந்து" (இறுதிப் பூ, ப.25)*

*என்னும் கவிதையானது பெண்ணின் மனதில் முடங்கிக் கிடக்கும் மறக்கவியலாத எண்ணங்கள் கொண்டு வெளிப்படுகிறது. பாதாளக் கிடங்கு என்ற குறியீட்டுப் பொருண்மையுள்ள சொற்களால் நனவிலி மனம் குறிப்பிடப்படுகிறது. நிறைவேறா ஆசைகளின் புதைக் கிடங்கு என நனவிலி மனத்தை குறிப்பிடலாம். சிறு வயதில் விளையாடிய தாயக் கட்டை, ஏழாங்கல், சோழிகள், சுற்றித்திரிந்த வயல் வெளி, மனதை நிறைத்த மழைத் துளி என பலவும் பசுமையான நினைவுகளாக கிடக்கின்றன. அதே போல பிரிவுக்குள்ளான நட்பு, மறக்கவியலாத காதல் எண்ணங்கள், மாதவிடாய், கருக் கலைந்து வெளியேறிய குருதி என பலவும் மனதில் இறைந்து கிடப்பனவாக குறிப்பிடுகிறார். இவை எளிதாகக் கடந்து விடக் கூடியனவாக இல்லை. பெண் காலங்காலமாக ஒடுக்கப்பட்ட தன்னிலையாக இருப்பதன் அடையாளங்களாக இருக்கின்றன. மறதியால் கூட இவற்றை அழித்து விட முடியாதபடிக்கு ஏக்கங்கள் மிகுந்தனவாக காணப்படுகின்றன. இது போலவே ஆணினால் வசப்படுத்தப்பட்ட தன்னிலையாகவே பெண் தொடர்கிறாள். "திருமணம் ஒரு சிறை, இது பெண்களை அடிமைப்படுத்தும். இதைச் சார்ந்த ஒழுக்க மதிப்பீடுகள் எல்லாம் ஆண்களால் உருவானவை." (க.பரிமளம், தி.ஜானகிராமன் நாவல்களில் பாலியல், ப.78) என்று கூறுவதற்கு ஏற்ப கணவன் கோபித்துக் கொள்ளும்போதும்*

*கூட அதனை இனிதாகவே எடுத்துக் கொள்ள வலியுறுத்தப்படும் பெண் தன் பணியை கடமையேயென செய்கிறாள். அதைத் தவிர அவளுக்கு வேறு நேர்வுகள் இல்லை என்பதை,*

*"ஒடுங்கிய விருப்பங்கள்*
*உன் விலகலின் நியாயங்களில்*
*கிழிபட்டு தொலைவதை*
*உணர்ந்தவாறே*
*உணவு சமைக்கிறேன்*
*பரிமாறுகிறேன்*
*படுக்கை விரிக்கிறேன்*
*கொஞ்சுகிறேன் குழந்தைகளை*
*புணரப்படுபவளாகிறேன்*
*உனக்குக் கசப்பூட்டிய*
*அந்த நஞ்சைத் தேடுகிறேன்*
*என் அலமாரிகளில்*
*கொஞ்சம் நானும் அருந்த" (இறுதிப் பூ, ப.43)*

*என்ற கவிதை வரிகளில் இதனைக் காணமுடிகிறது. அடிப்படையில் பெண் என்பவள் பண்டைக் காலத்தில் சுதந்திரமானவளாக இருந்தாள். ஆணாதிக்கச் சமூகமாக மாறிய நிலையில் குடும்ப அமைப்பிற்குள் தன்னை சுருக்கிக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டாள். அன்றிலிருந்து அவளது இயல்பான விருப்பங்கள் ஒடுக்கப்பட்டுள்ளன. கணவன் கோபம் கொண்டாலும் அவளை விட்டு விலகிச் சென்றாலும் அவள் அவ்வாறு கணவனை சினந்து கொள்ள முடியாது. இனிய நஞ்சென குடும்ப பாரத்தைக் குறித்துக் கூறுவதாக இக்கவிதை அமைகிறது. உணவு சமைக்கவும், பரிமாறவும், படுக்கை விரிக்கவும், இரவில் கணவனால் புணரப்படவும் ஆக உணர்வுகளற்று கடமையாற்ற வேண்டியவளாக பெண் இருக்கிறாள் என்பதையே இது காட்டுகிறது. இதனை பிறிதொரு கவிதையில் வேறு விதமாக வெளிப்படுத்துகிறார். ஆண், பெண் உறவென்பது இயல்பானதென்றாலும் ஆணே அதில் ஆளுகிறவனாக இருக்கிறான். மோகத்தின் மூலம் தன்னை ஆக்ரமிக்க எண்ணும் ஆணின் உணர்வுகள் பெண்ணின் உணர்வுகளை கண்டு கொள்வதில்லை என்பதாக அமைகிறது.*

*"என்னைக் குத்திய சிலாம்புகள்*
*பிடுங்கப்படாமலிருந்தன*
*பயணக் களைப்பையும்*
*பசிக்கும் வயிற்றையும்*
*உன் கண்ணசைவு*
*புறக் கணித்தது*
*தகிக்கும் உடலைத்*
*தண்மைப்படுத்தவில்லை*
*குளிர்சாதன இயந்திரம்*
*பிரிபடாத உணவுப் பொட்டலம்*
*பேசித் தீர்க்காத உணர்வுகள்" (இறுதிப் பூ, ப.44)*

*என்ற கவிதையில் ஆணின் உணர்வானது பெண்ணின் நிலையைப் பற்றிக் கவலை கொள்ளாததாக வெளிப்படுகிறது. அவள் பசியோடிருக்கிறாள், பயணக் களைப்பில் இருக்கிறாள் என்பதெல்லாம் ஒரு பொருட்டாக இல்லை. ஆணின் தகிக்கும் உடலானது குளிர்வை அடையவில்லை. அதற்கான குளிர்சாதன இயந்திரமாகத்தான் பெண் இருக்கிறாள் என்பதாகக் கூறப்படுகிறது. பிரிபடாத உணவுப் பொட்டலம் ஆனால் ஆடைகள் விலக்கப்படுகிற பெண்ணுடல், ஆடைகளும் கோழி இறகைப் போல பிய்த்தெறியப்படுவதாகக் கூறப்படுகிறது.*

*"கொன்ற கோழியிறகுகளைப்*
*பிய்த்தெறிவது போல்*
*எப்படிக் களைந்தாய்*
*என் ஆடைகளை" (இறுதிப் பூ, ப.44)*

என்று பெண் நடத்தப்படும் விதம் பற்றிக் கூறப்படுகிறது. கவிஞரின் எண்ணங்களில் ஆண்களால் காயம்பட்ட ரணங்களும், குத்திய சிலாம்புகளும் என்ற குறியீட்டின் மூலம் காலம் காலமாய் அவர்கள் மேல் தொடுக்கப்படுகின்ற வன்முறைகள் பற்றிக் கூறப்படுகிறது.

உமா மகேஸ்வரியின் கவிதைகளில் உள்ளார்ந்த படிமங்களாக பெண் வாதை, ஆணாதிக்கச் சமூகத்தின் வன்முறைகள் ஆகியன வெளிப்படுகின்றன. அழுத்தமான பதிவுகளை அவருடைய கவிதைகள் கொண்டிருக்கவில்லை. இயற்கையுடனான நேசத்தைக் கவிதை வழி வெளிப்படுத்தும் அவருடைய மனப் படிமத்தில் நுகர்வு சமூகத்தின் இயற்கை மீதான தாக்குதல் பற்றிய அக்கறை வெளிப்படுகிறது எனக் கொள்ளலாம்.

முடிவுரை

தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் பெற்று வரும் வளர்ச்சியின் விளைவாக புதுக்கவிதைகளின் தோற்றம் அதன் வளர்ச்சி அதில் ஈடுபடும் எண்ணற்ற கவிஞர்களின் கவிதைகள் அவற்றின் பேசுபொருள் ஆகியன பற்றிய கருத்துக்கள் தமிழில் மிகுந்துள்ளன. தற்காலக் கவிஞர்களில் உமாமகேஸ்வரியின் மனப் படிமங்கள் அவருடைய கவிதைகளில் வெளிப்படக் காணலாம். அவருடைய இறுதிப் பூ என்னும் சிறு கவிதைத் தொகுதி குழந்தைமையின் சாயலில் இயற்கையுடனான நேசத்தை வெளிப்படுத்தும் போது இயற்கைக்கும் மனிதர்களுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்துள்ளமையை சுட்டிக் காட்டுகிறார். அதுபோல சங்கில் உள்ளோடும் கடல் கேள்விகளால் துளைக்கும் போது வெளியேறிச் சென்று விடுகிறது. அதன் மூர்க்கம் அதன் இயல்பு அதனை நோக்கி கேள்வி கேட்பது இயற்கையைத் தன்வயப்படுத்தும் முயற்சி என்பதால் மனிதனிடமிருந்து விலகிச் செல்கிறது. அது போல பெண்களின் மனப் படிமங்களாக வெளிப்படும் கவிதைகளில் காலங்காலமாக பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டு வரும் நிலையினை வெளிப்படுத்துகிறது, பெண்கள் வீட்டில் கணவனுக்காகவே வாழ்கிறார்கள். குடும்பப் பொறுப்புகளைச் சுமந்து வாழ்கிறார்கள் என்பதைக் கடந்து அவர்களுடைய உணர்வுகளை புரிந்து கொள்ள சமூகம் முயற்சிப்பதில்லை என்பதாக அவருடைய கவிதைகள் அமைகின்றன.

துணை நூற்பட்டியல்

1. உமா மகேஸ்வரி, இறுதிப் பூ, வம்சி வெளியீடு, திருவண்ணாமலை, 2021
2. க.பரிமளம், தி.ஜானகிராமன் நாவல்களில் பாலியல், விடியல் பதிப்பகம், உப்பிலி பாளையம், கோயம்புத்தூர், 2011.
3. சு.மலர்க்கொடி, சமூகவியல் நோக்கில் மணிமேகலை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2016
4. வறீதையா கான்ஸ்தந்தின், கடற்கோள் காலம், எதிர் வெளியீடு, பொள்ளாச்சி, 2019.
5. வறீதையா கான்ஸ்தந்தின், பழவேற்காடு முதல் நீரோடி வரை, எதிர் வெளியீடு, பொள்ளாச்சி, 2014.

********* ********* ********** ********* ********* ********** ********** **********